**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**OS No: 65/2014**

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**வா.சா.1 (சாமியாத்தாள்) நாள் 12.08.2025**

குறுக்கு விசாரணை ( 4 ம் பிரதிவாதி தரப்பில்)

நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்கத் தெரியும். தாவா சொத்து விவரங்களை நான் தான் சொன்னேன். 1972 ம் வருடத்திய பாகக் கறார் ஆவணத்தின் அடிப்படையில் சொத்து விவரம் சொல்லியுள்ளேன். அந்த ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை தான் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் பழைய கச எண் 137. அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 75 சென்ட் ஆகும். அதில் ஒரு கிணறு உள்ளது. கிணற்றிற்கு மின் இணைப்பு உள்ளது. அந்த கிணற்றில் என் சித்தப்பா மற்றும் பெரியப்பா நாச்சியப்ப கவுண்டர், குமாரசாமி கவுண்டர், நல்லப்ப கவுண்டர் ஆகியோர்களுக்கு பாத்தியம். அந்த கிணற்றில் போர்வெல் இல்லை. முருங்கத்தொழுவு கிராமத்தில் உள்ள கிணற்றில் போல்வெல்லும் உள்ளது. கிணற்றில் உள்ள போர்வேல்க்கு மின் இணைப்பு உள்ளது அது யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. போர்வெல் எனது தகப்பனாரின் நிலத்தில் தான் உள்ளது. 1972 ம் வருடம் எனக்கு 5 வயதிருக்கும், தற்போது 58 வயது. திருமணம் வரை எனது அனைத்து தேவைகளையும் என் தகப்பனார் தான் பூர்த்தி செய்து வந்தார். திருமண செலவுகளை என் தகப்பனாரும் சகோதரரும் முன்நின்று தான் நடத்தினார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து நீங்கலாக எங்கள் குடும்பத்திற்கு வேறு சொத்துக்கள் இல்லை. என் தாயார் பெயரில் சொத்து இருந்தது, அதை பாகப்பிரிவினை செய்து கொண்டோம். என் தாயாரின் சொத்துக்களை 30 வருடங்களுக்கு முன்பு பிரிவினை செய்து கொண்டோம். திருமணத்திற்கு பின்னிட்டு பாகக் கறார் செய்து கொண்டோம் என்றால் சரிதான். 1972 ம் வருடத்திய பாகக் கறார் பத்திரத்தில் உள்ள சங்கதிகள் உண்மையானவை

தான். மேற்படி பத்திரத்தில் 4ம் வரியில் சுயராஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்தை பிரித்துக் கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சிறிது நேரம் கழித்து தன்னால் படிக்க முடியவில்லை என்று கூறுகிறார். 1972 ம் வருடத்திய பாகப்பிரிவினை ஆவணத்தில் சுயராஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்து என சொல்லப்பட்டுள்ளது என்றால் சாட்சி தெரியாது என கூறுகிறார். 1972 ம் வருடத்திய பாகப்பிரிவினையில் என் தகப்பனாருக்கு பி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். 1972 ம் ஆண்டு என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் மதிப்பு ரூ.2172/- என்றால் ஆவணத்தில் அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பிரிவினையில் என் தந்தைக்கு கச 135/2 மட்டும் தான் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் கச 135/2 மற்றும் 135/4 ஆகிய சொத்துக்களை சேர்த்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கச 135/2 ல் உள்ள சொத்து மட்டும் தான் என் தகப்பனாருக்கு ஒதுக்கப்ட்டது என்றும் நான் வேண்டுமென்றே வழக்கில் இதர சொத்துக்களையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சொத்து விவரத்தில் ரங்கசாமி பாகத்திற்கு கிழக்கு என செக்குபந்தி குறிப்பிட்டுள்ளதில் ரங்கசாமி என்பது என் தகப்பனாரை தான் குறிக்கும் வேறு நபர் அல்ல என்றால் சரி. குப்பிச்சிபாளையம் கிராமத்தில 2 இடத்தில் சொத்து உள்ளது, அந்த இரண்டு இடத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த இரு இடங்களை தவிர என் தகப்பனாருக்கு வேறு இடங்களில் இல்லை என்றால் சரிதான். தாவா முதல் அயிட்ட சொத்தில் என் தகப்பனாருக்கு கிழக்கு என்று நான்கு எல்லை குறிப்பிட்டதிலிருந்தேன என் தகப்பனாருக்கு வேறு சொத்துக்கள் உள்ளது என்றும், அந்த சொத்தை குறிப்பிடாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் அயிட்ட சொத்தில் கச135 மட்டும் தான் என் தகப்பனாருக்கு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல, நான் வேண்டுமென்றே ரிச 138 சொத்தையும் வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. முருங்கத்தொழுவு கிராமத்தில என் தந்தைக்கு எந்த புல எண்ணில் சொத்து உள்ளது என்றால்

122 ஆகும். என் தகப்பனாருக்கு கச 935 மற்றும் 936 ல் தான் முருங்கத்தொழுவு கிராமத்தில் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஏற்பட்டுள்ள உட்பிரிவுகளை ஒப்புக் கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா இல்லையா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 2 ம் அயிட்டத்தில் 2 ம் இனமாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்திற்கு சர்வே எண் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் அது வீட்டு சொத்தாகும், அதில் கதவு எண் சொல்லப்பட்டுள்ளது. அந்த வீட்டிற்கான ஆவணங்கள் நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். 1972 ம் வருடத்திய பாகப்பிரிவினை ஆவணத்தில் நான் தாவா 2 ம் அயிட்டத்தில் குறிப்பிட்டுள்ள 2 ம் இன சொத்து சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 2 ம் அயிட்ட 2 ம் இன வீடு யார் பெயரில் உள்ளது என்பதற்கு நான் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த வீட்டின் கதவு எண் தொடர்பான ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் என் தகப்பனார் பெயரில் தான் உள்ளது. ரீச 134/2 ல் கிணறு, மோட்டார் உள்ளது என்றும் அதை பொறுத்து நான் வழக்கிலும் சொத்து விவரத்திலும் எந்த பகுதியிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோன்று ரீச 1276/3 ல் 5 எச்பி மோட்டார், கிணறு உள்ளது என்றும் அதை நான் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அதேபோன்று மேற்படி கிணற்றிற்கு பெறப்பட்ட மின் இணைப்பு கூட்டாக அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றும், அதையும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் யாவும் வாசாஆ 6 ல் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றும், அதை தெரிந்தே நான் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால சரியல்ல. வழக்கில் 2 ம் அயிட்ட 2 ம் இனமாக உள்ள வீடு 4 ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும், அந்த சொத்தையும் இந்த வழக்கில் நான் வேண்டுமென்றே சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி அவரே வீடு கட்டி, மின் இணைப்பு பெற்று வரிகளுக்கு உட்படுத்தி சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்தால் அவை என் வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் தான் அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால சரியல்ல. எந்த காலகட்டத்திலும் தாவா சொத்தை

கூட்டாக அனுபவிக்கவில்லை என்றும், கந்தாயம் செலுத்தவில்லை என்றும் அதனால் தான் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாவில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரம் தவறானது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1972 ம் வருடத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்ட சொத்திற்கு நான் தற்போது பாகப்பிரிவினை கோர முடியாது என்றால சரியல்ல. என் தகப்பனார் தற்போது உயிருடன் உள்ளார். 1972 ம் ஆண்டு என் தகப்பனாருக்கு பாகப்பிரிவினையில் தனியாக ஒதுக்கப்பட்ட சொத்திற்கு நான் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் எப்போதும சுவானீதத்தில் இல்லை என்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல.

(1 ம் பிரதிவாதி மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்)

**<u>குறுக்கு விசாரணை ( 6 ம் பிரதிவாதி தரப்பில்)</u>**

6 ம் பிரதிவாதி யார் என்பது தற்போது தான் தெரியும். அவர் பக்கத்து ஊரை சேர்ந்தவர் என்பது முன்னரே தெரியும். அவர் சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்று 2 மாதங்களுங்களுக்கு முன்பு தான் தெரியும். தெரிந்த பிறகு அவரை வழக்கில் சேர்த்துள்ளேன். 1972 ம் ஆண்டு பாகப்பிரிவினையில் என் தகப்பனாருக்கு பி செட்டியூல் சொத்து பிரிந்தது. தாவா 2 இன சொத்துகளின் சர்வே எண், அமைப்பு தெரியுமா என்றால் தோட்டம் அமைந்துள்ள இடம் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 2 வில்லங்க சான்று சர்வே எண் 138/2 க்கு 1967 முதல் 1986 வரையான ஆண்டிற்கு மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அதற்கு பின்னிட்டு தற்போது வரை வில்லங்க சான்று பார்க்கவில்லை என்றால் சரி. 6 ம் பிரதிவாதியை எதற்காக வழக்கில் சேர்த்தேன் என்றால் நான் சேர்க்கவில்லை. 6 ம் பிரதிவாதி எந்த வருடம் கிரயம் பெற்றார் என்றால் 1987 அல்லது 1988 ஆக இருக்கலாம். அவர் பெயருக்கு ஏற்பட்ட கிரய பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை. அவர் எவ்வளவு விஸ்தீரணம் கிரயம பெற்றுள்ளார் என்றால் 39 சென்ட் கிரயம் பெற்றுள்ளார். 2 மாதத்திற்கு முன்பு வரை அந்த சொத்தை பொறுத்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. 30.09.1988 ல் 1 மற்றும் 4 ம்

பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு சர்வே 138/2 ல் 40 சென்ட் கிரயம் கொடுத்துள்ளனர் என்றும், 37 ஆண்டுகள் அது குறித்து எனக்கு எதுவும்தெரியாமல், அனுபவத்திலும் இல்லாமல் நான் வழக்கில் சேர்த்துள்ளது தவறானது என்றால் சரியல்ல. இந்து வாரிசுரிமை சட்டத்தின்படி 1988 ம் ஆண்டே கிரயம் ஏற்பட்டுள்ளதால் அந்த சொத்தை பொறுத்து நான் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி கிரயம பெற்ற சொத்திற்கு அவர் பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. 6ம் பிரதிவாதிக்கு எதிராக நான் எவ்வித பரிகாரமும் கோரமுடியாது என்றும் காலவரையறை சட்டதால் எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED Digitally signed by M ASHFAQ AHAMED Date: 2025.08.12 16:50:48 +0530

Subordinate Judge,
Perundurai.